கருக்கம்

தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு வரி விலக்கு– 2008–09 ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு (மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள்) ஏற்படும் வருவாய் இழப்பு – ஈடு கட்டுதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசு ஆணை (நிலை)எண்.154 நாள் : 12.8.2008

படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.75 (நநி(ம)குவ துறை, நாள் : 01.06.2007
2) அரசாணை (நிலை) எண்.130 (நநி(ம)குவ துறை, நாள் : 19.09.2007

---

ஆணை:

தமிழில் பெயரிடப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கும் அரசின் முடிவின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு (நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்) ஏற்படும் வருவாய் இழப்புகளை ஈடுகட்டும் வகையில் ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்தேழு கோடி மட்டும்) தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக 2007–08 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கோரிக்கை எண்.10–ல் வணிக வரிகள் (ம) பதிவுத் துறையால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அத்தொகையை தமிழ்த் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோல் 2008–09–ற்கான வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் மானியக் கோரிக்கை எண்.10–ல், ரூபாய் 30.00 கோடி (ரூபாய் முப்பது கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடையே 90 :10 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

2) எனவே , தமிழில் பெயரிடப்படும் தமிழ் திரைப்படங்களுக்கு முழு வரி விலக்களிப்பதனால் 2008–09 ஆம் ஆண்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்ய ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்து ஏழு கோடி மட்டும்) தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், இத்தொகையை அரசின் விருப்பத்திற்கேற்றவாறு நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான புதுமையான திட்டங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையான ரூ.27.00 கோடியை (ரூபாய் இருபத்து ஏழு கோடி மட்டும்) இதற்கென தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரால், ஏற்கனவே பராமரிக்கப்பட்டு வரும் "நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி" கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்கான கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் ஆணையர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் அரசிற்கு நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும். இவற்றில் தெரிவு செய்யப்பட்ட கருத்துருக்களுக்கோ அல்லது பிற திட்டங்களுக்கோ உரிய அனுமதி வழங்கி நிதியை விடுவிக்க தக்க ஆணைகள் அரசால் வெளியிடப்படும். இதன் பேரில், டுபிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மேற்படி துறைத் தலைவர்களுக்கு உரித்தான தொகையை மேற்படி நிதியிலிருந்து வழங்குவார் என்றும், டுபிட்கோ இதற்கான பயன்பாட்டு சான்றிதழினை துறைத் தலைவர்களிடமிருந்து பெற்று அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும், இப்பொருள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி டுபிட்கோ காலமுறை அறிக்கையினை அரசுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

4)மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

"3604-00 உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும், இழப்பீடுகளும் ,ஒதுக்கீடுகளும் 103 - கேளிக்கை வரி-1 திட்டத்தில் சேராதது AC - கேளிக்கை வரியை தள்ளுபடி செய்வதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இழப்பீடு - 51 இழப்பீடு 02 - ஏனைய இழப்பீடு (DPC 3604 - 00-103- AC- 5123)"

செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்காணும் கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலராக செயல்படுவார்.

5) மேலே பத்தி -2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ரொக்கமாக விடுவிக்காமல் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படலாம் :-

"8433.00 Civil Deposits - 800 other Deposits - BW Deposits of Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited - (TUFIDCO) (DPC 8443-00-800 - BW 000C (Receipts)"

6) மேலும் மேற்படி தொகையை குறுக்குக் கோடிட்ட காசோலை வாயிலாகப் பெற்று அதனை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் (TUFIDCO) கட்டுப்பாட்டில் உள்ள "நகர்ப்புற அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி" (TUIDRF) என்ற தனி வைப்பு நிதியில் சேர்க்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7) ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கான ஆணைகள் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் வெளியிடப்படும்.

8) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.45552/நநி(ம)குவ/08, நாள் 7.8.08 மற்றும் ,வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் அ.சா.கு. எண்.11387/C1/08, நாள் 22.7.08 ஆகியவற்றின் இசைவுடன் வெளியிடப்படுகிறது

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
செயலர்,
ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை –9
தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு நிறுவனம், சென்னை–35
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை –3
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை –108
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –9
மாநில கணக்காயர், சென்னை –18
மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
செயலரின் தனிச் செயலாளர், சென்னை –9.
நிதித் துறை, சென்னை–9
வணிக வரி (ம) பதிவு த் துறை, சென்னை –9
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
(மாந 1, மாந2, பேரு2, பேரு8) துறை, சென்னை–9

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.
13/8/08